**மாண்புமிகு சார்பு நீதிமன்றம், மானாமதுரை**
**O.S. No. 227 / 2023**

**வா.சா.3 – பாலு** **06.08.2026**

**குறுக்கு விசாரணை :-**

எனக்கு சாட்சி சொல்வதற்கு நீதிமன்றத்திலிருந்து சம்மன் வரவில்லை வாதி அழைத்ததன் பேரில் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். வாதி திருமுருகனுக்கு தாவா சொத்து எப்படி பாத்தியம் என்று எனக்கு தெரியாது. வாதிக்கு தாவா சொத்து வருவதற்கு முன்பு தாவா சொத்தை யார் அனுபவித்தார் யார் பெயரில் பட்டா இருந்தது என்று எனக்கு தெரியாது. திருமுருகன் தற்போது சென்னையில் வேலை பார்த்து வருகிறார். திருமுருகன் தாவா சொத்தை எந்த காலத்திலும் அனுபவிக்கவில்லை என்றால் நான் தான் 3 வருடமாக விவசாயம் செய்து வருகிறேன். நான் தாவா சொத்தில் விவசாயம் செய்வதற்கு என்ன ஆவணம் வைத்துள்ளேன் என்றால் பயிர் காப்பீடு செய்த ஆவணம் வைத்துள்ளேன். அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. நான் தாவா சொத்தை வருடத்திற்கு ரூ.3000/- குத்தகைக்கு எடுத்துள்ளேன். நான் குத்தகை ரூ.3000/- வாதிக்கு கொடுத்ததற்கு ஆவணம் வைத்துள்ளேனா என்றால் இல்லை. நான் வாதிக்காக தாவா சொத்தில் குத்தகைக்கு விவசாயம் செய்து வருவதாக வழக்கிற்காக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. எங்கள் ஊரைச்சேர்ந்த தமிழ்நேசன் என்பவரது மகளை தான் வாதி திருமணம் செய்துள்ளார் என்றால் சரிதான். தமிழ்நேசன் தாத்தாவும் எனது தாத்தாவும் உடன் பிறந்தவர்கள் என்றால் சரிதான். அதனால் வாதி திருமுருகன் எனது உறவினர் என்றால் சரிதான். வாதி திருமுருகன் உறவினர் என்பதால்

அவர் தயார் செய்த நிரூபண வாக்குமூலத்தில் நான் கையொப்பம் இட்டு வாதிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தமிழ்நேசன் ஒப்பந்தங்கள் எனது பெயரில் எடுத்து வேலை செய்வார் என்றால் சரியல்ல. தாவா சொத்து எனக்கு எதுவென்றே தெரியாது என்றும் வழக்கிற்காக நான் விவசாயம் செய்வதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது

சார்பு நீதிபதி
மானாமதுரை